**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி 2022**
**C011 இருபதாம் நூற்றாண்டு கவிஞர் இருவர்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பாரதி எந்த ஆங்கிலக் கவிஞரின் பெயரைப் புனைப்பெயராகக் கொண்டார்?
2. தமிழ்ப் பத்திரிக்கையின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?
3. பாரதி இயற்றிய முப்பெருங் காவியங்கள் யாவை?
4. பாரதி பொருள்கேட்டு யாருக்குச் சீட்டுக் கவி எழுதினார்?
5. துன்பமெனும் கடலைக் கடக்கும் தோணி என்று யாரைக் கூறுகிறார்?
6. பாரதி எவரை வெறுக்கிறார்?
7. பாரதியைக் கட்டுப்படுத்தாதவை யாவை?
8. புதுவைக்கு வந்து தங்கிய விடுதலை வீரர்கள் யாவர்?
9. புதுவை அரசியலில் ஒளிவிட்ட பிரஞ்சுக் கோட்பாடு என்னென்ன?
10. பாரதிதாசன் நடத்திய கவிதைக்காண இதழ் என்ன?
11. பாரதியைப் பாவேந்தர் எந்த வயதில் சந்தித்தார்?
12. பாரதிதாசனின் தேசியப்பாடல்களை வெளியிட்ட இதழ் எது?
13. பாவேந்தர் தமிழருக்கு உணர்த்திய கடமை என்ன?
14. மெய்யாய் உடல் உயிர் கண்டீர் என பாவேந்தர் கூறுவது என்ன?
15. தமிழரின் எந்த செயல் உயிருக்கும் மேலானதாகப் பாவேந்தர் கூறுகிறார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பாரதியின் காசி வாழ்க்கை குறித்து எழுதுக?.
2. பாரதியார் உருவாக்கிய தாயின் மணிக்கொடி பற்றிக்குறிப்பிடுக?
3. எதிர்கால இந்தியா பற்றி பாரதி சிறுவருக்குக் கூறியது என்ன.
4. காந்தி பற்றிப் பாரதி குறிப்பிடுவது என்ன
5. யார் படைத்த உலகம் எனப் பாவேந்தர் கேட்பது என்ன?
6. மக்கள் நலம் பேணும் தன்மையைப் பாவேந்தர் எவ்வாறு கூறுகிறார்?
7. பாரதிதாசன் படைத்த பெண்கள் எத்தகையவர்கள்?
8. பாரதிதாசன் மனிதனை அழிக்கும் மதம் என்பதற்குக் காரணம் என்ன?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பாரதியாரின் புதுவை வாழ்க்கை குறித்து எழுதுக?

(அல்லது)

(ஆ) பாரதிதாசன் தம் கால மூடப்பழக்களைஒழித்து தன்மான உணர்வை எவ்வாறு பாடியுள்ளார்?

2. (அ) பாரதியாரும் பெண்விடுதலையும் பற்றிக் கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) பாரதிதாசனின் தமிழர், தமிழ் மொழிக் கொள்கையை விவரிக்க.

3. (அ) பாரதியின் சாதி ,சமய, அரசியல் விடுதலைச் சிந்தனைகளைப் பற்றி விவரிக்க?

(அல்லது)

(ஆ) பாரதிதாசனின் காப்பியங்கள் குறித்துக் கட்டுரை எழுதுக?

***